

சென்னை, தியாகராயர் நகரில், நேற்று (26.06.2023) தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 118–வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நலவாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ. நாராயணன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், ”கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருப்பத்தூர் வட்டாரத்தில் உள்ள லிம்ரா மெட்ரிக்குலேசன் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் சஞ்சீவி பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.விஜய்சந்திரன், திருப்பத்தூர் பேரூராட்சித் தலைவர் திருமதி கோகிலாராணி உட்பட பலர் உள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்பநல நிதியாக

# 330 கழக உறுப்பினர்களுக்கு ரூ.16 லட்சத்து 50 ஆயிரம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், , ஜூன் 27 -

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் மறைந்த 330 கழக அடிப்படை உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்பநல நிதியாக ரூ.16 லட்சத்து 50 ஆயிரத்தை அவர்களது குடும்பத்திற்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தான் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றவுடன் கட்சியின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார். அந்த வகையில் கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் திருமணத்திற்கும், கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் மறைந்தால் அவர்களது குடும்பத்திற்கு நல உதவிகள் வழங்கி வருகிறார்.

அந்த வகையில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் கடந்த 2021 - மார்ச் முதல் தற்பொழுது வரை மறைந்த கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களது அஞ்சலி செலுத்தி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கி வந்துள்ளார். அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறி ஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய, நகர, பேரூர்களில் நடைபெற்றது.

நாமகிரிப்பேட்டை ஒன்றியம் சீராப்பள்ளி, இரா. புதுப்பட்டி, நாமகிரிப்பேட்டை பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி. இராமசுவாமி, சீராப்பள்ளி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான ந.செல்வராஜ், இரா.புதுப்பட்டி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான பெ.ஜெயக்குமார், நாமகிரிப்பேட்டை பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான கே.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சீராப்பள்ளியில் 15 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தின ருக்கும், இரா.புதுப்பட்டி பேரூரில் 4 குடும்பத்தினருக் கும், நாமகிரிப்பேட்டை பேரூரில் 54 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும் என 73 கழக நிர்வாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி, தலா ரூ.5000 வீதம் ரூ. 3,65,000,

சேந்தமங்கலம் ஒன்றியம் சேந்தமங்கலம், காளப்பநாய்க்கன்பட்டி பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார், சேந்தமங்கலம் பேரூர் செயலாளர் என்.தனபால், காளப்பநாய்க்கன்பட்டி பேரூர் செயலாளர் முருகேசன், மாவட்ட கழக துணை செயலாளர் ராணி பெரியண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சேந்தமங்கலம் பேரூரில் 50 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும், காளப்பநாய்க்கன்பட்டி பேரூரில் 19 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும் என 69 குடும்பத்தினருக்கு தலா ரூ. 5000 வீதம் ரூ. 3,40,000,

இராசிபுரம் ஒன்றியம் அத்தனூர் பேரூர், பிள்ளாநல்லூர் பேரூர்களில் நடைபெற்ற நிகழ்வில் இராசிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளரும், ராசிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவருமான கே.பி.ஜெகநாதன், வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளரும், ஒன்றியக்குழு உறுப்பினருமான ஆர்.எம்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர்கள் பிள்ளாநல்லூர் அ.சுப்பிரமணியம், அத்தனூர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் பிள்ளாநல்லூர் பேரூரில் 20 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும், அத்தனூர் பேரூரில் 23 குடும்பத்தினருக்கும் என 43 குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,15,000,

ராசிபுரம் நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர் முன்னிலை வகித்தார். நகரப் பகுதியில் 10 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5,000 வீதம் ரூ.50,000,

நாமக்கல் ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய செயலாளர் வி.கே. பழனிவேல், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நாமக்கல் ஒன்றியத்தில் 41 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,05,000,

நாமக்கல் மேற்கு நகரத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் இரா.மாயவன், மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் நகரமன்றத் தலைவர் து.கலாநிதி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் 45 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,25,000,

நாமக்கல் கிழக்கு நகரத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், தலைமை செயற்குழு உறுப்பினர் மருத்துவர் இரா.மாயவன், கிழக்கு நகர செயலாளரும், நாமக்கல் நகராட்சி துணைத் தலைவருமான எஸ்.பூபதி, நாமக்கல் நகர மன்றத் தலைவர் து.கலாநிதி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப. ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் 49 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,45,000 என மறைந்த 330 கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியாக ரூ. 16 லட்சத்து 50 ஆயிரத்தை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

### ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்” என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழ்நாடு மக்களையும் மண்ணையும் பாதுகாத்திட

# முதல்வர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும்!

## தேவகோட்டையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூன் 27 -

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பொதுக்கூட்டம் 25ம்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை அண்ணா அரங்கில் நகர கழக செயலாளர் பெரி.பாலா தலைமையில் நிர்வாகிகள் மனோகரன், கே. ரங்கநாதன், விசாலாட்சி, கே.டி. அன்புச்செல்வன், கா.இளங்கோ, இரா.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ் .செல்வராஜ் வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான கே.ஆர்.பெரிய கருப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதாவது:-

தி.மு.க. கொள்கை சார்ந்த ஜனநாயக இயக்கம் ஆகும். அ.தி.மு.க. ஆட்சியின்போது ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக பல்வேறு ஜனநாயக விரோதமான செயல்களை மேற்கொண்டார். அதை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. தட்டி கேட்டது. கழக தலைவர் தளபதி அவர்கள் ஆணையின்படி .ஆளுநர் சென்ற இடங்களில் எல்லாம் கறுப்புக்கொடி போராட்டம் நடத்தியது. இதனால் ஆளுநர் பின் வாங்கினார். அ.தி.மு.க ஆட்சியில் அதை கண்டு கொள்ளாமல் சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றார்கள்.

**ஆளுநர் வரம்பு மீறி செயல்படுகிறார்!**

அ.தி.மு.க. ஆட்சி நடத்துகிறது என்று விடவில்லை. ஜனநாயகம் நசுக்கப்படுகிறது என்பதை எதிர்த்து கழகத்தலைவர் தளபதி அவர்கள் முதல் குரல் கொடுத்தார். தற்பொழுது தலைவர் தளபதி தலைமையி லான அரசு அமைந்துள்ளது. ஆளுநர் கடந்த ஆட்சியில் செய்தது போல் தற்போதைய ஆளுநர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருகிறார். ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறார். ஆளுநர் வரம்பு மீறிசெயல்படுகிறார். இதை தி.மு.க.எதிர்த்து குரல் கொடுக்கிறது. ஜனநாயகத்தை பாதுகாக்க எத்தகைய விலையையும் கொடுக்க தி.மு.க. தயாராக இருக்கிறது.

தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது இரண்டு முறை ஆட்சி பறிபோனது. அதைப்பற்றி தலைவர் கலைஞர் சிறிதும் பயப்படவில்லை. தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது இந்தியாவில் 10 பிரதமர்களை தேர்ந்தெடுத்தார். அவரது அரசியல் செயல்பாட்டினை இந்தியா முழுவ தும் உற்று நோக்கப்பட்டது.

**செப்.15 முதல் மகளிர் உரிமைத் தொகை!**

தலைவர் கலைஞர் அவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் கொடுக்கப்பட்டது. ஆனால் அதைப் பற்றி தலைவர் கலைஞர் பயப்படவில்லை. தொடர்ந்து ஜனநாயகத்தை பாதுகாத்து வந்தார். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் செயல்பட்டு வருகிறார். தளபதி அவர்கள் விதைத்த விதைதான் பீகாரில் இம்மாதம் 23ம் தேதிஎதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற அடித்தளமாக அமைந்தது. ஜனநாயகத்தை பாதுகாத்திட முதல்வர் தளபதி அவர்கள் பல்வேறு வகையில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறார். எங்கு ஜனநாயகம் நசுக்கப்பட்டாலும் அதை எதிர்க்கும் முதல் குரல் கொடுப்பவராக தளபதி அவர்கள் விளங்கி வருகிறார் . கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு செயல்பாடுகள் சரிவரவில்லை. நிதி பற்றாக்குறையில் இந்த அரசை தளபதி சீரமைத்தும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தி வருகிறார்

வருகிற செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் மகளிருக்கான மாதம்தோறும் ருபாய் 1000உரிமைத் தொகை வழங்கப்பட உள்ளது. சிறப்பான முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். தமிழக மக்களையும் தமிழ் மண்ணையும் பாதுகாத்திட முதல்வர் தளபதி அவர்கள் எடுக்கும் நடவடிக்கை களுக்கு மக்கள் நீங்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் பேசினார்கள். பொதுக்கூட்டத்தில் மாவட்ட மகளிரணி தலைவர் மணிமேகலை, அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்டம் மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதிர். ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், மாவட்ட வர்த்தக அமைப்பாளர் சி. அழகேசன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் அழகையா, சரவணன், கண்ட தேவி அசோக், மாவட்டமாணவரணி துணை அமைப்பாளர் பிரதீப் குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் மதார்சேட் , ஒன்றிய கழக செயலாளர்கள் நாகனிரவி, வழக்கறிஞர் பூபாலசிங்கம், காரைக்குடி நகர செயலாளர் என். குணசேக ரன் நகர ஒன்றிய கழக நிர்வாகிகள் சொர்ணலிங்கம் ஜாகிர் உசேன், பழனியப்பன், சரவணன், மாதவன், வெள்ளை என்ற சுப்பிரமணியம், நகர்மன்ற உறுப்பினர்கள் மனோ பிரகாஷ், சேக் அப்துல்லா, சிவகாமி ராமநாதன், பி.ஆர். எஸ். ஞானாம்பாள், மாணவரணி காளைராஜா, தலதமிழ், இளைஞரணி அரவிந்த், முகமது அலி, லட்சுமணன், பிசெல்வம்,

தொழில்நுட்ப அணி அரவிந்தன், சரன், விவசாய அணி மும்முடி நாதன், மீனவர் அணி ராஜ், இலக்கிய அணி அருண், சுற்றுச்சூழல் அணி முத்துப்பாண்டி, இலக்கிய அணி அருண், மகேந்திரன், பி.ஆர்.எஸ். பாண்டியன், மகளிர்ணி நிர்வாகிகள் பெனாசிர் பானு, ராஜாத்தி கருணாகரன், சித்ரா, செல்வி கருப்பையா, பாண்டிமீனாள், விஜி, கலைச் செல்வன், சாமிக்கண்ணு, மணிமாறன் செந்தில்குமார், ஆறுமுகம் , முத்துகுமார் கண்ணன் சேவியர் வழக்கறிஞர் ராஜ் அமுதன் கார்த்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக கவிஞர் அப்பச்சி சபாபதி தலைமையில் கலைஞரின் புகழுக்கு பெரிதும் முன்னேற்றமாக அமைந்தது அரசியல் பணியா, இலக்கிய பணியா என்ற தலைப்பில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெற்றது.

18வது செயலாளர் மனோ சதீஷ்குமார் நன்றி கூறினார். விழாவில் 500க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், மாநில இலக்கிய அணித் தலைவர் மு.தென்னவன், மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி ஆகியோர் வழங்கினார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தேவகோட்டை நகரச் செயலாளர் பெரி. பாலா தலைமையில் நகர கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்

### ஜூன் 27 (2020)



தனது இளமைப் பருவத்திலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கி 1961ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாவட்ட தி.மா.மு.க. மாநாட்டுப் பொருளாளராகவும், 1965ல் நெல்லை மாவட்டம், அய்யாபுரம் கிளைச் செயலாளராகவும், தலைமை இலக்கிய அணித் தலைவராகவும், கழக வெளியீட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கவித்திறன், உரைநடை வீச்சு, சிறுகதைச் சிறப்பு, நாடக ஊடகம், இலக்கிய ஆய்வு, அரங்கங்களை ஆட்கொள்ளும் சொற்பொழிவு அத்துணையிலும் முத்திரை பதித்த இவர், பாவேந்தர் பாரதிதாசன் திருக்கரத்தால் ‘பகுத்தறிவுப் பாவலர்’ எனும் பட்டம் பெற்றவர்.

“கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத் திறன், கவித்திறன் முதலிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும் '' என்று பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2005ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பாவேந்தர் விருதினை’ வழங்கி சிறப்பித்தார்.

7வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், தமிழக அரசின் சார்பில் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ நூற்றாண்டு பாவேந்தர் விருது கலைஞர் கரத்தால் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**